REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 10உ வியாழன் (27—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 11உ வெள்ளி (28—10—55) [இதழ் 176

வேலையில்லாதோர் - இன்ஷ்யூரன்ஸ் திட்டம்!

இந்தியாவில் வேலையில்லாதோர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவருவதுபற்றி திட்டக் குழு தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருப்பதாக திட்ட மந்திரி நந்தா தெரிவித்திருக்கிறார்.

திட்டக் குழுவின் நிபுணர் ஒருவர் இத்தகு திட்டத்தைத் தாக்கல் செய்திருப்பதாயும், அது குறித்துப் பரிசிலனை நடைபெறுவதாயும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

இந்தியப் பேரரசின் பிற்போக்குத்தனம்!

பீரங்கி, துப்பாக்கி வைத்து இராணுவத்தினர் 'ஆயுத பூசை'!

வேதங்கள் ஓதப்பட்டன!

மதச் சார்பற்ற நிலையா?

அம்பாலா, அக். 26—

இந்தியப் பேரரசினர் மதச் சார்பற்றவர்களா?—என்ற கேள்விக்கு, விடை பகர்வதாய் மட்டுமின்றி, அவர்களுக்கு இந்து மதச் சடங்குகளில் எவ்வளவு பற்று உண்டு—மூட நம்பிக்கைகளில் எத்தனை ஆழ்ந்த பிடிப்பு உண்டு என்பதைக் காட்டுவதாயும் அமைந்திருக்கிறது, ஒரு சம்பவம்!

இந்திய இராணுவத்தினர் 'ஆயுத பூசை' கொண்டாடியிருக்கின்றனர்!

பல்வேறு இராணுவக்கூடங்களில் உள்ள கோவில்களில், விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஆயுதங்களை—பீரங்கி, துப்பாக்கி முதலியவற்றை வைத்து, 'சரஸ்வதி பூசை' என்ற ஆயுத பூசை கொண்டாடியிருக்கின்றனர்.

பண்டிதர்கள் வேதங்கள் ஓத, 'ஜவான்'களும், இராணுவ அதிகாரிகளும், தரையில் சம்மணம்கூட்டி உட்கார்ந்து, பயபக்தியுடன் 'பூசை'யில் ஈடுபட்டனராம்!

பாதுகாப்பு இலாகா அமைச்சர் டாக்டர் கே. என். கட்ஜுவும், சில உயர்தர இராணுவ அதிகாரிகளும், அப்படி உட்கார்ந்திருந்தோரில் முன்வரிசையில் இடம் பெற்றிருந்திருக்கின்றனர்.

இராணுவ மோட்டார்கள் உட்பட சுமார் 100 வகை ஆயுதங்கள், வணங்குவதற்காகப் பூசையில் வைக்கப்பட்டிருந்தனவாம்.

பூசை முடிவில் இராணுவத்தினரைப் பாராட்டிப் பேசியிருக்கிறார், டாக்டர் கட்ஜு.

ஆலை தொழிலாளருக்கு போனஸ் தரப்படும்!

அகமதாபாத், அக். 25—

"அகமதாபாத் ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத்திற்கும் 80,000 தொழிலாளர் கொண்ட அகமதாபாத் ஜவுளி தொழிலாளர் சங்கத்திற்கும் ஏற்பட்ட 5 ஆண்டு போனஸ் திட்டப்படி, மொத்தம் உள்ள 66 ஆலைகளில் 63 ஆலைச் சொந்தக்காரர்கள், போனஸ் வழங்கச் சம்மதித்திருக்கிறார்கள்," என்ற தகவலை தொழிலாளர் சங்கச் செயலாளர் வாசவதா தெரிவித்திருக்கிறார்.

'நுங்கம்பாக்கம்'— புதிய இரயில் நிலையம்

சென்னை, அக். 26—

சென்னை சேத்துப்பட்டு—கோடம்பாக்கம்இடையே லயோலா கல்லூரி அருகில் அமைக்கப்பட்டு வரும் புதிய மின்சார இரயில்வே நிலையம் புத்தாண்டிற்குள் தயாராகி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த இரயில்வே நிலயத்திற்கு 'நுங்கம்பாக்கம்' என்று பெயரிடப்படும் என்றும், 'நுங்கம்பாக்கம்' என்ற பெயரின் பழைய உச்சரிப்பு அதுதான் என்றும் தெரியவருகிறது.

'எவருக்கும் அநீதி இழைக்கமாட்டோம்'

'எங்களுக்கிழைக்கப்படும் அநீதியை சகியோம்'

மராட்டிய மந்திரி முழக்கம்

நாசிக், அக் 25—

"நாங்கள் எவருக்கும் அநீதி இழைக்க விரும்பவில்லை; அதேபோது, எவரும் எங்களுக்கு அநீதி இழைப்பதை சகித்துக்கொள்ள மாட்டோம்.

"மராட்டியரின் நியாயமான கோரிக்கைக்கு காங்கிரஸ் மேலிடம் செவிசாய்க்காவிட்டால், மராட்டியர் பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் அமைக்க இறுதிவரை போராடுவர்,"

என்று, பம்பாய் மாநில 'ரெவினியூ' மந்திரியான பி. எஸ் ஹிரே, கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"வேறுபட்ட மாநிலங்கள், வேறுபட்ட இலட்சியங்களை—விருப்பங்களைக் கொண்டிருக்கின்றன.

"ஒவ்வொரு நகரத்திலும் ஒரு வர்த்தகப் படிப்புக் கல்லூரி அமைக்க வேண்டுமென குஜராத்திகள் விரும்பலாம்.

"ஆனால் மராத்தியர்கள், ஒவ்வொரு நகரிலும் ஒரு இராணுவ பயிற்சிக் கழகம் அமைக்க விரும்புவர்.

"ஒவ்வொரு தெருவிலும் குஜராத்திகள் ஒரு மளிகைக் கடை திறக்க விரும்புவர்;

"ஆனால், மராத்தியர் ஒருஉடற் பயிற்சிக்கூடம் அமைக்க விரும்புவர்.

"இந்த வேறுபட்ட விருப்பங்களை வளர்ப்பது—ஊக்குவிப்பது தான் நாட்டு முன்னேற்றத்தின் அடிப்படை என்பதானால், வேறுபட்ட அபிலாஷைகள் கொண்டிருப்பதில் தவறில்லை.

"மொழிவழி மாநிலம் அமைப்பது ஒன்றுதான், இந்த எண்ணங்களை ஈடேற்ற உதவக்கூடிய வழியாக இருக்க முடியும்."

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

'விதர்ப்பத்தையும் சேர்த்த இருமொழி மாநிலம் அமைப்பது என்று, மராட்டிய காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதினாலேயே, மராட்டிய சம்யுக்த கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாக இருக்க முடியாது.

"தேசிய நலன்களுக்கு இருமொழி பம்பாய் மாநிலம் உகந்ததாய் இருக்க முடியும்—என்று இதரர்கள் கூறும்போது, மராட்டிய காங்கிரசும், எல்லா குஜராத்தி, மாநிலங்களையும் ஒன்றாக இணைத்து ஒரு 'இருமொழி மாநிலம்' அமைப்பதை வரவேற்றது.

'இதை ஏற்றுக் கொள்வதோ நிராகரிப்பதோ, 'இருமொழி மாநிலம் வேண்டும்' என்று வாதிடும் வெறியர்களைப் பொறுத்ததாகும். அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தால் விதர்ப்பம், பம்பாய் உள்ளிட்ட சம்யுக்த மராட்டியம அமைக்கவேண்டுமென்ற தங்களின் அசல் கோரிக்கையை வலியுறுத்தி அதற்காகப் போராடுவர்"

★

குஜராத்தியர் வக்கரிப்பு

பம்பாயைத் தனி மாநிலமாக்க யோசனை

"தொடர்புடைய எல்லோரது நலன்களையும் உத்தேசித்து, உத்தேசிக்கப்பட்டுள்ள பம்பாய் மாநிலத்தை மூன்று கூறுகளாக—அதாவது, மராட்டியம், குஜராத், பம்பாய் என்று பிரித்து தனித்தனி மாநிலங்களாக்குவதே நல்லது,"

என்று, குஜராத்தி பிரதேச காங்கிரஸ், தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதாம்.

'மாநிலக் குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ள மராட்டியத் தலைவர்கள் சம்மதிக்காத நிலையில்தான், குஜராத்தியர் இந்த யோசனையைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது,' என்றும் அவர்கள் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

'ஒன்றுபட்ட பம்பாயில் வாழ, குஜராத்தியரை ஒப்பவைக்கும் எண்ணத்தை, மராட்டியத் தலைவர்கள் கொண்டிருப்பதாகக் காணோம்' என்றும் குஜராத் காங்கிரசார் தெரிவிக்கின்றனர்.

'விதர்ப்பத்தையும் பம்பாயுடன் இணைக்கவேண்டும் என்ற மராத்திய காங்கிரசின் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை; இப்படி தீர்மானம் நிறைவேற்றிய மராட்டிய நண்பர்கள், குஜராத்தியர்களின் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் மதிப்பளித்ததாகவே தெரியவில்லை; அந்தத் தீர்மானத்தின் நோக்கமெல்லாம், மராட்டியர்கள் மேலும் தங்கள் பெரும்பான்மை பலத்தைப் பெருக்கிக்கொள்ள எண்ணுவதுதான்; மராட்டிய காங்கிரஸ் தீர்மானம், உத்தேசிக்கப்பட்டுள்ள பம்பாயின் உருவத்தையே மாற்றிவிடுகிறது,' என்றும், குஜராத்திய காங்கிரசார் குறைபட்டுக்கொண்டனராம்.

'சமாதானத்திற்கு வழிகோலுக!'

ஐசனோவர் அறிக்கை

டென்வர், அக். 26—

அமெரிக்காவைப் போல சமரச மனப்பான்மையில் நடந்து கொண்டு, உலக முழுதும் ஆவலுடன் விரும்பும் சமாதானத்திற்கு வழிகோலுமாறு, சோவியத் ரஷ்யாவைக் கேட்டுக்கொண்டு, அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவர் ஒரு அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மீண்டும் மன்னர் பதவி கிடைக்குமென நம்புகிறாராம்!

பாவோ டாயின் கனவு?

பாரிஸ், அக். 25—

கடந்த 20 திங்களாகப் பிரான்சிலேயே குடியேறி வசித்துவரும் முன்னாள் மன்னரான பாவோ டாய், பிரெஞ்சு சர்க்கார் தனக்குத் தந்துவந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் என்று அறிவித்திருப்பது கேட்டு அதிர்ச்சியுற்றதாகத் தெரிவித்திருக்கிறாராம்.

அவர், தான் வீழ்த்தப்பட்டது குறித்துக் கவலைப்படவில்லை என்றும், மீண்டும் தான் மன்னராகும் வாய்ப்பு தனக்குக் கிடைக்கும் என்று அவர் நம்புவதாகவும் கூறப்படுகிறது.

மன்னர் பதவியை இழந்துவிட்டதினாலேயே, அவருக்குக் கிடைத்துவந்த சுகபோகமான வாழ்வுக்குக் குந்தகம் ஏற்படாது என்றும், ஏனெனில், அவருக்கு பிரெஞ்சு ரிவெரியாவில் சொத்துக்களும், பாரிசில் மாளிகை இருப்பதாயும் கூறப்படுகிறது.

1945-க்கு முன்பு ஒருமுறை அவர் சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டதும், 1949-ல் மீண்டும் அவர் மன்னராக்கப்பட்டதையும் கொண்டே, தனக்கு மீண்டும் மன்னர் பதவி கிடைக்கும் என நம்புவதாயும் தெரிவித்திருக்கிறாராம்.

தீன் தியெம், ஏற்கெனவே பிளவுபட்ட வியட்நாமை, ஜினிவா ஒப்பந்தப்படி தேர்தல் மூலம் ஒன்றாக்குவதை எதிர்த்து வந்திருக்கிறார் என்பதால், இப்போது தனக்குக் கிடைத்த வெற்றியைக் கொண்டு, தேர்தல்களை நடத்தவிடாமல் செய்வதற்கு மேலும் தீவிரமாக முயற்சிப்பார் என்றும் கூறப்படுகிறது.

இதனால் அவர், வியட்மின்களுடன் மோதுவார் என்றும், அப்போது தனக்கு ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்றும், பாவோ டாய் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறாராம்!

தென் வியட்நாம் குடியரசு

பிரதமர் தீன் தியெம் பிரகடனம்

சைகோன், அக். 26—

தென் வியட்நாம் பிரதமரான நிகோ தீன் தியெம் இன்று, ஏற்கனவே அறிவித்துள்ளபடி தென் வியட்நாம் நாட்டை ஒரு குடியரசு எனப் பிரகடனம் செய்திருக்கிறார்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற வாக்கெடுப்பின் விளைவாகவே, அதனைத் தொடர்ந்து இந்தப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

மன்னர் பாவோ டாய்க்கு பதிலாக, தீன் தியெமே நாட்டின் அரசியல் தலைவராக இருக்க வேண்டுமென வாக்கெடுப்பின் முடிவுகள் கூறின.

50 சதவிகித வாக்காளர்களே இதில் பங்கு கொண்டனர்.

மொத்தம் பதிவான வாக்குகள் 58,28,907.

தீன் தியெமுக்கு ஆதரவாக 57,12,735; பாவோடாய்க்கு ஆதரவாக 63,017; செல்லாதவை 44,115—என்று, சர்க்கார் தகவல் தரும் நிலையம் தெரிவித்திருக்கிறது.

இதன்படி, வாக்களித்தோரில் 98 சதவிகிதத்தினர், 'தீன் தியெமே அரசியல் தலைவராக இருக்கவேண்டும்' எனத் தெரிவித்திருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—10—'55 வியாழன்

சட்ட மன்ற உறுப்பினர் போக்கு!

சட்ட மன்றங்களிலும், மக்கள் சபையிலும் உறுப்பினர்களாயிருப்போர் — அவர்கள் பணக்காரர்களோ ஏழைகளோ—பணம் தந்தோ, தில்லுமுல்லுகள் செய்தோ வாக்குப் பெற்று உறுப்பினர்களானவர்களோ—அல்லது, தங்கள் கொள்கைபால் மக்களை ஈர்த்து வாக்குப் பெற்றவர்களோ— அவர்கள் எல்லாம், நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதத்தினராயிருக்கும் ஏழை, எளிய, சாதாரண, நடுத்தர மக்களின் பிரதிநிதிகள் என்பதை, பல நேரங்களில் அவர்கள் மறந்துவிடுகிற—கண்டிக்கத்தகுந்த நிலையை நாம் காண்கிறோம்.

தேர்தல் காலங்களில் தருகிற வாக்குறுதிகளைக் குறித்து அவர்களுக்குக் கவலை இருப்பதில்லை; குறிப்பிட்ட தங்களது தொகுதி மக்களை, தேர்தலுக்குப் பிறகு சந்திப்பதே இல்லை; தங்களின் சொந்த நலன்களைக் கூட்டிக் கொள்வதற்காகமட்டுமே தங்களுக்குக் கிடைத்த உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தி வருகின்றனர்—என்று பல உறுப்பினர்கள் மீது வாக்காளர் பெருமக்கள் பொதுவான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர்.

மேலும், பெரும்பாலான உறுப்பினர்கள், சபை நடவடிக்கைகளில் நியாயமாகக் காட்டவேண்டிய அக்கரை காட்டுவதில்லை என்பதும் — அவ்வப்போது, சட்ட மன்ற, பாராளுமன்றத் தலைவர்கள், மன்றங்களில் 'கோரம்' இல்லை என்று குறைபட்டுக் கண்டனம் தெரிவிப்பதிலிருந்து வெள்ளிடை மலையாகத் தெரிவதையும் நாட்டு மக்களும், நாமும் உணர்ந்துதான் இருக்கிறோம். இங்கு, உறுப்பினர்களின் அலட்சியப் போக்கு குறித்து பன்முறை கண்டனம் தெரிவித்திருக்கிறோம்.

இந்தப் பொதுவான குற்றச்சாட்டுகளுக்கு மட்டுமின்றி, சில உறுப்பினர்களைப் பற்றிய பெரும் குற்றச்சாட்டுக்களுக்கும் ஆளாகிற நிலையில் இருந்து வரும் இப்போதைய சட்ட மன்ற, பாராளு மன்ற உறுப்பினர்கள், சிலபல நேரங்களில், தங்களுக்குத் தரப்பட்டுவரும் வசதிகள் போதுமானதல்ல— என்று குரல் எழுப்புவதற்கு எப்படித் துணிவு பெற்றவர்களாயிருக்கின்றனரோ நமக்குத் தெரியவில்லை.

மக்களின் பிரதிநிதிகளாயிருப்போர், சட்டமன்றங்களில் தங்களது கடமையை சரிவர ஆற்றுவதற்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் எவருக்கும் மனக்கசப்பு இருக்க முடியாது; ஆனால், அளவுக்கு மீறிய வசதிகளை, தாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற பட்டயம் பெற்றிருப்பதாலேயே—பெற நினைப்பதை, ஏழை எளிய மக்கள் சகித்துக்கொள்ளமாட்டார்கள்.

திரு-கொச்சி சட்ட மன்றத்தில், சில தினங்களுக்கு முன், 'சட்ட மன்ற உறுப்பினர்கள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களாகத் தொடர்ந்து பணியாற்றியிருப்பார்களேயானால், அவர்களுக்கு ஓய்வுகால உபகாரச் சம்பளம் தரவேண்டும்'— என்று ஒரு உறுப்பினர் திர்மானம் கொண்டு வந்தாராம்; அது நிராகரிக்கப்பட்டுவிட்டாலும்கூட, 'உபகாரச் சம்பளம் வேண்டும்' என்ற எண்ணம் தோன்றுவது குறித்து சிந்திக்காமலிருக்க முடியாது.

அதேபோல, உத்தர பிரதேச சட்டசபை உறுப்பினரில் சிலர், தங்களுக்குத் தனியான மருத்துவ வசதிகள் வேண்டுமென்றும், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டால், பொது இடங்களிலன்றி தனி அறைகளில் தங்கி சிகிச்சை பெற வசதி வேண்டும்—என்றும் கோரினராம்.

தாங்கள் எவரின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்கின்றனரோ, அந்த மக்களின் நிலை என்ன என்பதைச் சிறிதும் இந்த உறுப்பினர்கள் உணராததே, இப்படி பிறருக்குக் கிடைக்காத சலுகைகளும், வசதிகளும் தங்களுக்கு வேண்டுமெனக் கோருகின்றனர் என்று நாம் எண்ணுகிறோம்.

இப்போது தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலுமுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் பெற்றுவரும் சம்பளமும், இதர பிரயாண வசதிகளும், 'படிக'ளும், மக்களின் சராசரி வாழ்க்கை நிலையோடு ஒப்பிடும்போது, மிக அதிகமானவையாகும். இந்த நிலையில், மேலும் வசதிகள் கோருவது, எந்த வகையாலும் நியாயமுடையதாயிருக்க முடியாது.

மக்களின் வரிப்பணத்திலிருந்து சம்பளமும், வசதிகளும் பெறும் இந்த உறுப்பினர்கள், சாதாரண மக்கள் தங்களுக்கு விதிக்கப்படும் வரிகளைச் செலுத்துவதற்குப் படுகிற அவதியை கணநேரம் எண்ணுவார்களேயானால், இப்படி மக்களிடமிருந்து வேறுபட்ட மனிதர்களாக தங்களைக் காட்டிக்கொள்ள முன்வரமாட்டார்கள்.

மக்களின் — குறிப்பாகத் தென்னாட்டவரின் வாழ்க்கை நிலையில், எந்த சிறு முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், தென்னாட்டில் உள்ள சட்டமன்றங்களில் அங்கம் வகிப்போரும், பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாயிருப்போரும் தங்கள் நிலைமட்டும் மேலும் மேலும் உயர வழி செய்துகொள்ள எண்ணவே கூடாது.

மத்திய ஆட்சியினர் அனுமதி தந்தனர்!

சென்னை மாநிலத்தில், தென்னார்க்காடு மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரித் திட்டத்துக்காக, சுமார் 7,700 ஏகரா விஸ்தீரணமுள்ள நிலங்களை—16 கிராமங்கள் கொண்ட பிரதேசம்—ரூ. 40 இலட்சத்திற்கு ஆர்ஜிதம் செய்வதற்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்திருக்கின்றனர்.

அறிவுத் திறன் பெற்றோரின் ஆற்றல்!

பாழாகாது தடுப்பது எப்படி?

மேலை நாடுகளில் சிறப்புக் கூட்டங்களின் நோக்கம் என்ன?

மதுரை சிறப்புக் கூட்டத்தில் அண்ணாதுரை

"இந்த நாட்டின் சூழ்நிலைகளுக்கேற்றவாறு மாணவர்களுக்கு வேலை முறைகள் அமைக்கப்படவில்லை; பொருளாதாரம், புள்ளி விவரங்கள் சேகரிக்க வேண்டியவர்களைக் கொண்டுபோய் சாதாரணமான காரியங்களுக்குப் பயன்படுத்துவது முறையாகாது.

"மாணவர்கள் சமுதாயப் பணியாற்ற முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதுதான். அவர்களின் பணி எத்துறையில் இருக்க வேண்டுமென்பதே இன்றுள்ள முக்கிய விடயமாகும். சாலையின் இருபக்கங்களிலும் நின்றுகொண்டு, மக்களை ஓரமாகச் செல்லுமாறு பணிக்கும் வேலையையா மாணவர்கள் செய்யவேண்டும்? அறிவுப் பிரச்சாரம் செய்யக்கூடிய ஆற்றல் மாணவர்களிடம் இருக்கிறது. அவற்றைச் சரியான வழியில் பயன்படுத்த வேண்டாமா?

"மாணவர்களில் திறன் படைத்தவர்கள் பலர் இருக்கின்றனர்; ஓவியம் தீட்டுபவரும், பொருளாதாரம் படித்தவர்களும் இருக்கிறார்கள்; இவர்களில் யார் யாரைக் கொண்டு எந்தக் காரியம் செய்யவேண்டுமோ அவர்களைக்கொண்டு அந்தக் காரியங்களைச் செய்யாததால்தான், நமது சக்திகள் பாழடைந்து போகின்றன,"

—என்று, 23—10—55 காலை மதுரை நகர் தி மு. கழகச் சார்பில், பழனி டாக்கீசில் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில், தோழர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

மாணவர்கள் செய்ய வேண்டிய பணிகளை விளக்கி, அவர் மேலும் பேசியதாவது:—

"பொது மக்களுக்கும், அலுவலகத்தில் பணியாற்றுபவர்களுக்கும் பகுத்தறிவு ஏற்படச் செய்வதற்காக மேல் நாடுகளில் கோடைகாலச் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இக்கூட்டங்களின் மூலம், சமுதாயத்துறையில் பொதுமக்கள் முன்னேறுவதற்கு வழி செய்யப்படுகின்றது. சிறப்புக் கூட்டங்கள் என்றால், அங்கே பேசப்படும் பொருள், அவற்றைக் கேட்போர்—ஆகியோருக்கெல்லாம் பயனளிக்கும் தன்மையில் அங்கே அமைகின்றன.

"சிறப்புக் கூட்டங்களின் மூலம், தங்கள் ஐயங்களுக்கு விளக்கம் பெறுகின்றனர். இங்கோ, கேள்விகள் கேட்பது வேறுவிதமாகப் போய்விடுகிறது. அறிவு விளக்கத்திற்கான கேள்விகளுக்குப் பதில், 'அண்ணாதுரையின் அடுத்த திரைப் படம் எது?—'இரங்கோன் இராதா'வில் சிவாஜி-கணேசன் நடிப்பாரா?'—என்பன போன்ற கேள்விகளைத்தான் கேட்கிறார்கள். இதனாலேயே இங்கு, கூட்டங்களில் கேள்விகளை அனுமதிப்பதென்றால் அச்சமாக இருக்கிறது.

"அரசியலில் விடுதலை பெறுவது மட்டும் தி. மு கழகத்தின் குறிக்கோள் அல்ல; சமுதாயத் துறையிலேயும் மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்று விரும்புகிறோம்.

"சுமார் 200 ஆண்களாக சமுதாயத்திலே ஊறிப்போன பழக்கவழக்கங்களை மக்களிடையே மாணவர்கள் எடுத்துரைக்கவேண்டும். இந்த நாட்டில், எங்கெங்கே என்னென்ன பொருள்கள் விளைகின்றன—என்ற புள்ளி விவரங்களையும் சேகரித்து அவைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி, அறிவு விளக்கம் பெறச் செய்யவேண்டும். இத்துறையில் மாணவர்கள் பணியாற்ற வேண்டும். தற்போதுள்ள இளங்கோ மன்றம், சிலப்பதிகார மன்றம் என்பவைகள் எல்லாம், 'திராவிட நாடு திராவிடருக்கே'— என்று எழுதி தொங்கவிட்டால் போதுமென்று கருதுகின்றன; வ. உ. சி மன்றம் இருந்தால், தேர்தலில் காங்கிரசுக்கு வேலை செய்வதுதான் தங்கள் பணி என்று கருதுகின்றன; இந்தவழக்கம் மாற வேண்டும். மேல்நாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள நூல்களைக் கற்றுள்ள மாணவர்கள், அவைகள் மற்றவர்களுக்கும் பயன்படத்தக்கவாறு செய்யவேண்டும்."

★

மதுரையில் அண்ணா

நிகழ்ச்சிகள் விபரம்

மதுரை நகர் தி. மு. கழகச் சார்பில், 23—10—55 காலை 10-30 மணிக்கு மதுரை பழனி டாக்கிசில், தோழர் அ பொன்னம்பலனார் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் திரண்டு வந்திருந்தனர்

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர் கே. ஏ மதியழகன், சாதி ஒழிப்பு நிலை பற்றிப் பேசினார். இறுதியாக அண்ணா அவர்கள் விரிவுரையாற்றினார்.

முத்து படிப்பகம் 3-வது ஆண்டு விழா

மதுரை முத்து படிப்பகம் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா, திலகர் சதுக்கத்தில், 23—10—55 மாலை 7 மணிக்கு, தோழர் எ. அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் தி. மு கழகக் கொள்கைகளை விளக்கியும், வடவர் ஆதிக்கம்—சுரண்டல்களைப் பற்றியும், ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டு நிலைமையை விளக்கியும் பேசினர்.

பின்னர், தோழர் எஸ். முத்து அவர்களால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

"தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா.-வின் செலவு

திட்டமிட்டதை மிஞ்சுகிறது

கடந்த செப். 30-ந் தேதியுடன் முடிந்த ஓராண்டில், ஐ நா. நிறுவனம், திட்டமிடப்பட்டிருந்ததை விட ரூ. 12,98,052 அதிகம் செலவிட்டிருப்பதாக ஐ நா. பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

சிறிது சிக்கனமாயிருந்திராவிடின், அதிகச் செலவு சுமார் 17,61,582 ரூபாயாக இருந்திருக்கும் என்றும், அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

துவக்கத்தில் செலவாகும் எனத் திட்டமிடப்பட்டிருந்தது ரூ. 22.4 கோடியாகும்.

'எதிர்பாராத செலவுகள்' என்ற தலைப்பில், பெரும்பாலும் லண்டன் நகரிலேயே நடைபெற்ற ஆயுதக் குறைப்புத் துணைக் குழுவின் கூட்டங்களுக்குத்தான் ரூ.-4,76,000 செலவிடப்பட்டிருக்கிறது.

'மொழிவழி அரசு அமையவேண்டும்'

'எஞ்சிய திரு—தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணையவேண்டும்'

மதுரை பொதுக்கூட்டத்தில் அண்ணாதுரை

"திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக மாநில மாநாட்டில், 'தி. மு. கழகம் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமா, கூடாதா' என்பதுபற்றி ஒருநாள் முழுவதும் விவாதிக்கப்படும்; பின்னர், வாக்குகள் எடுக்கப்படும்; பெரும்பாலோர் முடிவு, தேர்தலில் கலந்துகொள்ளுவதற்கு ஆதரவாக இருந்தால் தேர்தலில் ஈடுபடுவதற்கான திட்டங்கள் பின்னர் தயாரிக்கப்படும்."

"உள்ளாட்சிக் கழகத் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு நேரத்தை வீணாக்குவதைவிட, நாட்டின் முக்கியப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தலாம்; இத்தேர்தல்கள், நாட்டின் எதிர்காலத்தை முடிவு செய்யக்கூடியனவல்ல."

"மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பற்றி எல்லாக் கட்சியினரும் ஆலோசிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்; குழுவின் சிபாரிசினால் பாதிக்கப்பட்டுள்ள திரு-தமிழகப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைப்பதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்."

—இவ்வாறு, 23-10-55 மாலை, மதுரை திலகர் திடலில், முத்து படிப்பகத்தின் மூன்றாவது ஆண்டு விழாவையொட்டி டாக்டர் எ. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"மொழிவழி அரசு தேவை என்பதை தி. மு. கழகம் ஒப்புக்கொள்ளுகிறது. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பதையும், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோரிக்கையையும் நாங்கள் ஒன்றாக இணைத்துப் பேசுகிறோம்.

"தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ் மொழி ஆட்சிமொழியாகவும், தமிழ் ஆதிக்கமும் இருக்கவேண்டியது அவசியமே; அதே போல் தெலுங்கு மலையாளம், கன்னடம் ஆகிய பகுதிகளில் அந்தந்த மொழிகளே ஆட்சிமொழிகளாக இருக்க வேண்டும்.

"தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு அரசுகளும் தங்களுக்குள்ளே தோழமை கொண்டு கூட்டாட்சியை ஏற்படுத்தி, வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டுமென்பதே எங்களுடைய விருப்பமாகும்."

1955 ஏப்ரல்—ஜூன் மூன்று மாத காலத்தில் இந்தியாவில் மொத்தம் 5,646 மோட்டார் வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த எண்ணிக்கை 1954-ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கையைப் போல இரு மடங்காகும்.

தொடக்கக் கல்வி விசாரணைக் குழு அறிக்கை

சிபாரிசுகளின் விவரம்

தொடக்கக் கல்விச் சீர்திருத்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தி சிபாரிசுகளைச் செய்ய வேண்டுமென டாக்டர் அழகப்பா அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினரின் அறிக்கை அதிகாரபூர்வமான முறையில் வெளியிடப்பட்டுள்ளது. அக்குழுவினர் செய்துள்ள சிபாரிசுகளின் சுருக்கம் மேலும் இங்கு தரப்படுகிறது :—

"நமது மாநிலத்தில் இப்பொழுது, ஒரே வயதுள்ள சிறுவர்கள் கல்வி பயிலுவதற்கு மூன்று வகைப்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. உயர்தரத் தொடக்கப்பள்ளி, உயர்தர அடிப்படைக் கல்விப் பள்ளி, நடுத்தரப்பள்ளி—ஆகியவைகளே இந்த மூன்று வகைப்பட்ட பள்ளிகள்.

அடிப்படைக் கல்வியே, மாகாண, மத்திய அரசாங்கங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாக இருப்பதால், இந்த மூன்று வகைப்பட்ட பள்ளிகளும் இறுதியில் உயர்தரத் தொடக்கப் பள்ளி முறையில் அமையவேண்டி ஏற்படும்

உயர்தர தொடக்கப்பள்ளிகளில் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக ஆக்கினால், மாணவர்கள், உயர்தர தொடக்கக் கல்வியை முடித்துக் கொண்டு உயர்தரப் பள்ளிகளில் சேரும்போது குறைபாடு இல்லாமல் சேரலாம். ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகக் கற்பதால் பள்ளிக்கூடங்களில் ஏற்பட்டதை விட அதிக நேரம் கற்பிக்கவேண்டி ஏற்படாது. ஆகவே, உயர்தரத் தொடக்கக் கலவி வகுப்புகளில் ஆங்கிலம் கட்டாய பாடமாக ஆக்கப்படலாம்

கல்வியின் நோக்கம்— எவ்வாறு அமைவது ?

தொடக்கக் கல்வியின் அடிப்படை நோக்கங்களை திட்டவட்டமாக நிர்ணயிப்பது அவசியமாகும்

சிறுவர்களின் சக்திகள் எல்லா வகைகளிலும் வளர்ச்சியடையும்படி செய்வதாகக் கல்வியின் நோக்கம் இருக்க வேண்டும். பல்வேறு சக்திகளை வளர்ச்சி அடையாமல் செய்து, ஒன்றை மட்டும் வளர்ச்சியடையும்படி செய்வது கல்வியின் நோக்கமாக இருக்கக்கூடாது— அதாவது, சிறுவர்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவை வளர்ச்சி அடையும்படிச் செய்வது நோக்கமாக இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு முழு வளர்ச்சி அடைய உரிமை இருக்கிறது— என்ற காரணத்தினால் மட்டுமின்றி, அவர்கள் நியாயமான முறையிலும், திறமையுடனும், கௌரவத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காகவும், இவ்வித வளர்ச்சி, கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் குழந்தைகள் சரியான குடிகளாக உருவாவதற்குப் பயிற்சி பெற வேண்டும் என்பதும் கல்வியின் மற்றொரு நோக்கமாக இருக்க வேண்டும்

தொடக்கக் கல்வி தற்கால உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் இருக்க வேண்டுமானால், அது, பொதுக் கல்வியாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யாமல் இருக்க முடியாது; அதே சமயத்தில், மேல்படிப்புப் படிக்க இயன்றவர்கள், தொடர்ந்து கல்வி பயிலுவதற்கு ஏதுவாக இருக்கும் முறையிலும் தொடக்கக் கல்வி இருக்கவேண்டும்.

மாணவர்களிடை வளரவேண்டிய மனப்பண்பு

மேற்கண்ட விரிவான நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, தொடக்கப்பள்ளி மாணவர்களைப்பொறுத்த வரையில் கீழ்க்கண்ட குறைந்த அளவு குறிக்கோள்கள் நிறைவேற வேண்டும் என்று கருதுகிறோம் :-

(1) யோசிப்பதற்கும், பேசுவதற்கும், மொழியே கருவி போன்று இருப்பதால், தாய் மொழியையோ அல்லது வட்டார மொழியையோ போதுமான அளவு மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்; இலக்கியத்தையும் ஓரளவு நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும் ; கணிதத்திலும் நியாயமான அளவு திறமைபெற வேண்டும்.

(2) சுகாதாரக் கொள்கைகள் உள்பட இயற்கை உண்மைகள், விதிகள் ஆகியவற்றையும் மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

(3) தம்முடைய கலாச்சார சரித்திரபூர்வமான விவரங்களையும் மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக மனித சமூகத்தின்கொள்கைகள், சாதனைகள் ஆகியவற்றையும் அவர்கள் ஓரளவு தெரிந்துகொள்ளவேண்டும்.

(4) அறிவை வளர்ச்சி அடையும்படிச் செய்வதற்கான ஒரு விருப்பமும் மாணவர்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும்.

(5) மாணவர்களின் உடல் வன்மையும் வளர்ச்சி அடையும்படிச் செய்யப்படவேண்டும்

(6) தம்மையும், தம் சூழ்நிலையையும் சுத்தமான முறையிலும், சுகாதார முறையிலும் வைத்துக் கொள்ளும்படியான பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும்.

(7) நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்ற கருத்தையும், சமூகத்திற்கு ஏற்ற தன்மைகளையும் மாணவர்களிடையே ஏற்படுத்தவேண்டும்

(8) தம் அலுவல்களை மாணவர்கள் முறைப்படி செய்வதற்கான பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும்

(9) இடையூறுகள் ஏற்பட்டாலும், தாங்கள்மேற்கொண்ட வேலைகளை விடாமுயற்சியுடன் செய்யும் மனப்பான்மையை மாணவர்களிடையே வளர்க்கவேண்டும்.

(10) கட்டுப்பாடுடனும், ஒழுங்குடனும் மாணவர்கள் நடந்துகொள்வதற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

(11) மாணவர்களிடையே ஒத்துழைப்பு மனப்பான்மையை வளர்க்க வேண்டும்.

(12) மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மையையும், அவர்களுக்காகத் தியாகம் செய்யும் மனப்பான்மையையும் மாணவர்களிடையே வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும்.

(13) நேர்மைக் குணத்தை மாணவர்களிடையே வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும்.

(14) குறிக்கோளுடன் வேலைகளைச் செய்யவும், விவரங்களைக் கண்டறியவும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

(15) அவசியம் ஏற்பட்டால், தொழில் சம்பந்தமான எந்த வேலையையும் செய்வதற்குத் தயாராக இருக்கும் மனப்பான்மை மாணவர்களிடையே வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

பாடத் திட்டம்

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வகைப்பட்ட பள்ளிகளின் பெயர் முறைகளை இடைக்காலத்தில் மாற்றுவது அவசியமில்லை.

உயர்தரத் தொடக்கப் பள்ளிகளையும், நடுத்தரப் பள்ளிகளையும் அடிப்படைக் கல்விப் பள்ளி முறைக்கு உடனடியாக மாற்றுவது சாத்தியமில்லாததால், உயர்தரத் தொடக்கப் பள்ளி வகுப்புக்களின் பாடத் திட்டங்களை, கூடிய வரையில், நடுத்தரப் பள்ளி வகுப்புக்களின் பாடத் திட்டங்களுக்கு ஒட்டிய முறையில் அமைக்க வேண்டும். இது சம்பந்தமாக உயர்தரத் தொடக்கப் பள்ளி வகுப்புக்களில் ஆங்கிலம், இந்தி ஆகியவற்றைக் கற்பிப்பது பற்றி ஆலோசிக்க வேண்டும்.

உயர்தரத் தொடக்கப் பள்ளிகளின் பாடத் திட்டங்களில் ஏற்கனவே ஆங்கிலம் விருப்ப பாடமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது ; இதற்காக, நேரங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளில், ஆங்கிலம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுகிறது மாற்றியமைக்கப்படும் உயர்நிலைக் கல்வித் திட்டத்திலும் ஆங்கிலம் தொடர்ந்து கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படும் என்று தெரிய வருகிறது. உயர்தரத் தொடக்கப் பள்ளிகளில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டால், உயர்தரத் தொடக்கக் கல்வியை முடித்து உயர்நிலைப் பள்ளியில் சேருவதற்கு விரும்புவர்கள் கல்விக் குறைபாடு இல்லாமல் இப்பள்ளியில் சேர இயலும் ; ஆகவே, உயர்தரத் தொடக்கப்பள்ளி வகுப்புகளில் ஆங்கிலம் கட்டாய பாடமாக கற்பிக்கப்படலாம் என்று சிபாரிசு செய்கிறோம்.

தொழில் கல்வி தொடர்ந்து நீடிக்கவேண்டும்

உயர்தரத் தொடக்கக் கல்வி, வாழ்க்கையின் தேவைக்கு ஏற்ற முறையில் மக்களை உருவாக்க வேண்டுமாகையால், அது, பெரும் அளவு பூர்த்தியான முறையில் இருக்கவேண்டும். உயர்தரத் தொடக்கப் பள்ளிகளில் படிப்பவர்களில் பெரும்பாலோர், இக்கல்வி பெற்ற பின்பு, ஏதாவது தொழிலையே மேற்கொள்வார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும்.

உயர்தரத் தொடக்கப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் தொழில்கள், மக்கள் மேற்கொள்ளும் தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கும் முறையில் இருப்பதால், தற்பொழுது தொழில் கல்விக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் தொடர்ந்து நீடிக்க வேண்டும்

உயர்தரத் தொடக்கப்பள்ளியின் பாடத் திட்டத்தில், குடிசைப் பயிற்சிக்கு முக்கிய இடம் அளிக்கப்படவேண்டும்.

புது மொழிகளைப் புகுத்தக் கூடாது

தொடர்ந்து கல்வி பயிலுவதற்கு உயர் நிலைப்பள்ளிகளுக்குச் செல்லாதவர்களுக்கு மேற்கண்ட பாடங்கள் முக்கியமாக இருப்பதை முன்னிட்டு, தற்பொழுது ஆங்கிலமே கட்டாய பாடமாக கற்பிக்கப்பட வேண்டும் என்றும், இந்தி போன்ற பொது மொழிகள் புகுத்தப்படக்கூடாது என்றும் சிபாரிசு செய்கிறோம்.

விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள்

பாடத் திட்டங்களில், மேற்கண்டவாறு மாற்றங்கள் செய்வதையொட்டி, உயர்தரத் தொடக்கப் பள்ளிகளில் விசேடத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டி ஏற்படும்; இதனால் செலவு கூடும் என்பதில் சந்தேகமில்லை; ஆகவே, ஆரம்பத்தில், ஒவ்வொரு பூர்த்தியான உயர்தர தொடக்கப் பள்ளிக்கும் ஒரு ஆசிரியரைக் கூடுதலாக நியமனம் செய்ய அனுமதிக்கலாம்; இந்த ஆசிரியர், ஒரு வட்டார மொழிப் பண்டிதராக இருக்கலாம்; வட்டார மொழிப் பண்டிதர் கிடைக்காவிட்டால் 'செகண்டரி கிரேட்' ஆசிரியரோ, அல்லது, அடிப்படைக் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியரோ நியமிக்கப்படலாம்.

பள்ளிகளில் கல்வி புகட்டப்படும் நேரம் பற்றி குழு கவனமாக ஆலோசனை செய்தது. தற்பொழுது பள்ளிகளில் கல்வி புகட்டப்படும் நேரத்தைப் பொதுவாகக் குறைக்க வேண்டாமென்று குழு கருதுகிறது.

தோட்ட வேலைப் பயிற்சி அவசியமாகும்

அடிப்படைப் பள்ளிகளில் நூல் நூற்புத் தொழில்தான் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. 100-க்கு 25 பள்ளிகளில் தோட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது இனி எல்லா அடிப்படைப் பள்ளிகளிலும், தோட்டப் பயிற்சியே முதன்மையானதாகக் கருதப்பட வேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

பாண்டங்கள், பாய் செய்தல், கயிறு திரித்தல், பனை ஓலைப் பண்டங்கள், தோல் வேலை போன்ற தொழில்களும் எங்கெங்கு முடியுமோ அவ்விடங்களில் கற்பிக்க முயற்சி செய்யலாம்.

இத்தொழில்களுடன், நூல்கள் மூலம் பள்ளி மாணவர்கள் கல்வியிலும் தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும். வாசிக்கக்கூடிய தனி அச்சிட்ட நூல்கள், ஆசிரியர்களுக்கு உதவியளிக்க நூல்கள், படங்கள், புள்ளிவிவரங்கள் முதலியனவும் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

கைத்தொழில்கள்மூலம் கிடைக்கும் பயனை மாணவர்களுக்கும் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது எங்கள் கருத்து

இப்பொழுதுள்ள தொடக்கப் பள்ளிகளை அடிப்படைக் கல்விப் பள்ளியாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட வேண்டும். தொடக்கப் பள்ளிகளிலேயிருந்து அடிப்படைக் கல்விப் பள்ளிகளாக மாற்றி, பின்னர் இதர பள்ளிகளையும் மாற்ற வகை செய்ய வேண்டும்.

வட்டாரக் குழுவின் மேற்பார்வையில்....

பஞ்சாயத்து, மாவட்டக் கழகப் பள்ளிகள் இனி 'வட்டாரக் குழு'வின் மேற்பார்வைக்கே விட்டுவிட வேண்டும் என்று இக்குழு சிபாரிசு செய்துள்ளது. ஏனெனில் அவை (பள்ளிகள்) சரிவர நடைபெறவில்லையென்ற குறைகள் தங்களிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் இக்குழு கூறுகின்றது.

தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளாயினும் சரி; வேறு எதுவாயினும்சரி—மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்கக்கூடாது. 'எலிமெண்டரி கிரேட்' பயிற்சிக்குப் பொறுக்கப்படுகிறவர் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறியவராக இருக்க வேண்டும்.

'எலிமெண்டரி கிரேட்', 'உயர் கிரேட்' ஆகிய பயிற்சிக் காலத்தை இப்பொழுதுள்ளபடி இரண்டு ஆண்டு காலமாக நீடித்துவைத்திருக்கலாம்.

உடற் பயிற்சியளிக்கவும் இவ்வாசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும்

தொடக்கப் பள்ளிகளில் 1முதல் 3 வகுப்புக்கள்வரை கல்வி போதிக்கப் பெண்களே நியமிக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களுக்கு சேம நிதி, ஓய்வுகால உதவி அளிக்க ஏற்பாடு செய்யலாம். இத்துடன் கட்டாய இன்சூரன்சுக்கும் ஏற்பாடு செய்யலாம்

இன்னும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகள் பற்றியும் இக்குழுவின் சிபாரிசில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கட்டாயக் கல்வி

பின்னர் கட்டாயக் கல்வி குறித்துத் தனது கருத்தையும் இக்குழு வெளியிட்டிருக்கிறது.

கட்டாயக் கல்வி முறையை நடைமுறையில் கொண்டுவருவதற்குமுன் 300 மக்கள் கொண்ட ஒவ்வொரு ஊரிலுமோ, அல்லது அதற்கு அண்மையிலுள்ள ஒவ்வொரு ஊரிலோ ஒரு பள்ளி நிறுவப்பட வேண்டும்.

செலவில் பாதியை மக்கள் ஏற்றுக்கொள்ளத்தயாராயிருக்குமிடங்களில், மாணவர்களுக்கு நடுப் பகல் உணவு அளிக்க வகை செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட வகுப்பு வரையில் பள்ளிகளில் சேர்ந்த மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற ஒரு வரையறை செய்யலாம்.

அடுத்தபடியாகக் கட்டிடங்கள், நிலங்கள் ஆகியவை பற்றி இக்குழு குறிப்பிட்டுள்ளது.

'ஆராய்ச்சிப் பகுதி' ஏற்பட வேண்டும்

சரியான பாட நூல்கள் தயாரிப்பதில் கல்வித் துறையினருக்கும், அவற்றை வெளியிடுவோருக்கும் ஆலோசனை கூற—ஆராய்ச்சிகள் நடத்த ஏதாவது ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஓர் 'ஆராய்ச்சிப் பகுதி' நிறுவ வேண்டும்.

குறிப்பிட்ட காரணமில்லாது பாடத் திட்டத்தை மாற்றக் கூடாது ; மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மாற்றலாம்.

ஓராசிரியர் பள்ளிகள்

மேலும் இக்குழு செய்துள்ள சிபாரிசுகள் சில வருமாறு :—

ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும்போது, ஒற்றை ஆசிரியர்கள் பள்ளிச் சிக்கல்களையும் கருத்தில் கொண்டு, ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளை எப்படி ஒரே ஆசிரியர் நடத்துவது என்பது குறித்தும் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

உயர்நிலை 'கிரேட்' பயிற்சி பெற்றவர்களைத்தான் ஓராசிரியர் பள்ளிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

ஒற்றை ஆசிரியர் பள்ளி விரிவுபடுத்தக்கூடியதாக இல்லாவிடில், அப்பள்ளியில் 1 முதல் 3 வகுப்புகளே இருக்கலாம்.

செவிடு, ஊமை, முடம் போன்ற குறைபாடுகளுள்ள சிறுவர்கள் எண்ணிக்கையும் புள்ளிவிவரமும் சேகரிக்கப்பட வேண்டும். இவர்களுக்குத் தனி வசதிகள் உள்ள பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும்.

பரிசோதனைப் பள்ளிகள்

ஏதேனும் புதிய முறையைக் கையாண்டு பார்த்து ஆராய்ச்சி செய்வதற்கான தனி முறைப் பள்ளிகளை அரசாங்கத்தின் அனுமதியுடன் ஆரம்பிக்கலாம் ; இதற்கு அரசாங்கமும் உதவியளிக்கலாம்.

நூல் கல்விக்கும், தொழிற் பயிற்சிக்கும் அப்பாற்பட்டதாக-ஆயுள், சாரணப் பயிற்சி போன்றவற்றிற்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பெற்றோர் சங்கம் நிறுவப்பட வேண்டும்.

மாணவர்கள் நலனில் அக்கரை செலுத்துக !

கிராமங்களுக்கு அளிக்கப்படும் சமுதாய வானொலிப் பெட்டிகளை கூடுமான வரையில் பள்ளிகளிலே நிறுவி, கல்வி ஒலிபரப்புகளை மாணவர்கள் பயன்படுத்தும்படி செய்யலாம்

ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பொருட்காட்சிசாலையை ஏற்படுத்தலாம். இதேபோல ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் சிறுவர்களுக்கான பொருட்காட்சி நிறுவுவது யோசிக்கப்படலாம்

மதக் கல்வி கூடாது!

பள்ளிக்கூடங்களில் மதக் கல்வியைப் போதிக்கக்கூடாது. ஒழுக்கம் பற்றிய போதனை பாடத் திட்டத்தின் பகுதியாக அமைந்திருக்க வேண்டும்.

கல்வித் துறை அதிகாரியின் அலுவலகத்தில் ஒரு தனி ஆராய்ச்சிப் பகுதியை ஏற்படுத்தி, தனி நிறுவனங்களும் கல்வி ஆராய்ச்சியில் ஈடுபடுவது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதையும் ஆலோசனை செய்யலாம்.

சில முக்கிய குறிப்புகள்

இப்பொழுதுள்ள துணை இன்ஸ்பெக்டர்களின் வேலைப் பளு குறைக்கப்பட வேண்டியது அவசியமாகையால், இவர்களுடைய எண்ணிக்கையைக் கூடுதலாக்க வேண்டும்.

வட்டாரக் குழுக்கள் தொடக்கப் பள்ளிகளின் மேற்பார்வையாளர்களை (சூபர்வைசர்களை) நியமிக்கலாம்

உயர்நிலை 'கிரேட்' ஆசிரியர்களை 'இன்ஸ்பெக்டர்'களாக நியமிக்கும் முறை நீங்க வேண்டும்.

அடிப்படை பள்ளிகளுக்கென்று தனிக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டியது அவசியமில்லை

மாவட்டக் கல்வி அதிகாரிகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கலாம்

இரண்டாம் திட்டத்திற்கு நிதி!

ரூ. 400 கோடிக்கு புது வரி விதிப்பு?

திட்ட மந்திரி நந்தா அறிவிப்பு

அகமதாபாத், அக். 26—

இரண்டாம் திட்டத்திற்கு நிதி திரட்டுவதற்காக, சுமார் ரூ. 300 முதல் ரூ. 400 கோடி வரை புது வரி விதிப்புகள் இருக்கும் என்று திட்ட மந்திரி ஜி. எல். நந்தா தெரிவித்திருக்கிறார்.

மொத்தம் ரூ. 700 கோடி வரை வரிகள் மூலம் திட்டத்திற்கு நிதி எதிர்பார்க்கப்படுவதாயும், இதில் சுமார் ரூ. 300 முதல் ரூ. 400 கோடி வரை, தேசீய வருமான அதிகரிப்பு மூலம் கிடைக்கும் என்றும் எஞ்சிய தொகையை புது வரிகள் மூலம் வசூலிக்கவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

எல்லையில் ஆப்கன் இராணுவ நடமாட்டம்?

பாக். கவர்னர்-ஜெனரல் இரகசியப் பேச்சு

கராச்சி, அக். 26—

பாகிஸ்தான் எல்லையோரத்தில் ஆப்கன் துருப்புகள் நடமாடுவதாக பாகிஸ்தான் இரகசிய போலீசாருக்குக் கிடைத்துள்ள தகவல் குறித்து பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் பெஷாவரில் இரகசிய மாநாடு ஒன்றில், பாக். இராணுவத்தினருடன் விவாதம் நடத்தியிருக்கிறார்.

இந்த விவாதத்தில் மேற்கு பாகிஸ்தான் முதன் மந்திரி பாகிஸ்தான் இராணுவ தளபதி ஆகியோர் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த மாநாட்டின் விளைவாக, பாகிஸ்தான் எல்லையோரத்தில், இராணுவம் பலப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

சிங்கப்பூரில் நடைபெற்ற கொழும்பு திட்ட மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு, டாக்கா திரும்பியுள்ள பாகிஸ்தான் வெளி விவகார இலாகா மந்திரியான அமீதுதுல் ஹக் சௌத்ரி, 'பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரத்தில் எவர் தலையிடுவதையும் அனுமதிக்க மாட்டோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'கராச்சியில் உள்ள தூதவரை ஆப்கன் சர்க்கார் திரும்ப அழைத்திருப்பது காண அதிர்ச்சியுறுகிறேன்; பாகிஸ்தான் எப்போதும் ஆப்கனுடன் நல்லுறவு கொள்ளுவதையே விரும்பி வந்திருக்கிறது' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'பலுசிஸ்தான் காந்தி' கைது

'பலுசிஸ்தான் காந்தி' என்று அழைக்கப்படும் கான் அப்துல் சமத்கான், பொதுநலப் பாதுகாப்புக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, இன்று குவெட்டா பிரிவில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவர், மேற்கு பாகிஸ்தானை ஒரு மாநிலமாக இணைப்பதை எதிர்க்கும் இப்பக்கத்தின் ஆலோசனை மன்றத்தில் ஒரு அங்கத்தினராயிருப்பதுடன், பலுசிஸ்தான் காந்தி புஷ்து சகோதரக் கழகத்தின் தலைவரும் ஆவார்.

கடந்த ஆண்டு ஜூலையில் அவர் வெளிநாட்டு 'ஏஜெண்டு'களுடன் தொடர்புகொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்ற உத்திரவுடன் தனது கிராமத்தை விட்டு வெளியேறக்கூடாது என்றும் உத்திரவிடப்பட்டிருந்தார்; இந்த ஆண்டு ஜூலையில்தான் அந்தத் தடை நீக்கப்பட்டது; ஆனால், மீண்டும் இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார் — வெளிநாட்டு 'ஏஜெண்டு'களுடன் தொடர்பு கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு!

யார் அந்த 'வெளிநாட்டு ஏஜெண்டு'கள் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

'வட்டாரக் குழு' அமைப்பு

துவக்கக் கல்வி விசாரணைக் குழுவினர் கருத்து

3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ள தொடக்கக் கல்வி விசாரணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 'வட்டாரக் குழு'வின் அமைப்பு நிலை இங்கு தரப்படுகிறது:—

பஞ்சாயத்து, மாவட்டக் கழகப் பள்ளிக்கூடங்கள் 'வட்டாரக் குழு'க்கள் நிர்வாகத்துக்கு மாற்றப்பட வேண்டும்; ஒரு 'வட்டாரக் குழு'வின் கீழ் 200 பள்ளிக்கூடங்களுக்கு அதிகப்படாமல் இருக்கலாம்.

இந்தக் குழுவில் ஒன்பதுக்குக் குறையாத உறுப்பினர்கள் இருக்கலாம்—மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் நால்வர்; பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் மூவர்; கல்வியில் அக்கறையுள்ள இருவர்—ஆகியோரை சர்க்கார் நியமிக்கலாம்.

மாவட்டக் கழக, பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மூன்றாண்டுக் காலத்திற்கு 'வட்டாரக் குழு' பதவி வகிக்கும்.

துவக்கக் கல்வி நிதி, இந்த 'வட்டாரக் குழு'வுக்குச் சேர வேண்டும்.

குடந்தையில் அண்ணாதுரை

30-10-55 காலை 9 மணிக்கு, குடந்தை மீனாட்சி தியேட்டரில், இளைஞர் தமிழ் மன்ற கட்டிட நிதிக்காக, தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில், சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, என். வி. நடராசன், கே.ஏ. மதியழகன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

30—10—55 மாலை 4 மணி அளவில், போர்டர் நகர மண்டபத்தில், கும்பகோணம் நகர தி. மு. கழகச் சார்பில், அண்ணா அவர்கள், மாணவர்களிடையே ஆங்கிலத்தில் பேசுவார்.

30—10—55 அன்று மாலை, குடந்தை அரண்மனைத் தோட்டத்தில், குடந்தை நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை, மற்றும் பலர் பேசுவர்.

கழகக் கூட்டம்

பந்தநல்லூர்
கடை வீதியில்
29—10—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். அசோகன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். கிட்டப்பா
ம. கோ. மணி

இலங்கை தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம்

"நவம்பர் 12, 13 தேதிகளில் கண்டியில் கூடுகிறது. பொதுக் குழு கூடுவதற்கான இட வசதியும், கூட்டத்திற்கு வரும் தோழர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுவருகிறது.

"13-11-55 மாலை 4 மணிக்கு, கண்டியில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுக் குழு உறுப்பினர்கள் சொற்பொழிவாற்றுவர்,"

என்று, இலங்கை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. அதிமணி அறிவிக்கிறார்.

மதுரையில் அண்ணா

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழ்த் தாலுகாக்களை உடனடியாகத் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்று இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது. அமையவிருக்கிற சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று இக்கூட்டம் இந்திய சர்க்காரை வற்புறுத்துகிறது"

இறுதியாக அண்ணா அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

மாநில மாநாட்டுக்கு நிதிகள் வழங்கியவர்கள் விபரம் வருமாறு:-

மதுரை முத்து படிப்பகத்தார்	ரூ.	150-0-0
மதுரை மாவட்டம் வெள்ளரிப்பட்டி தி. மு கழகம்	,,	20-0-0
குமாரம் தி மு கழகம்	,,	15-0-0
சோரிப்பாளையம் தி மு கழகம்	,,	15-0-0
ஒத்தக்கடை தி. மு. கழகம்	,,	10-0-0
மதுரை அண்ணாதுரை படிப்பகம்	,,	5-0-0
அழகரடி மங்கள விலாஸ் ஓட்டல் தொழிலாளர்கள்	,,	5-5-6
ஆக மொத்தம்	ரூ.	220-5-6

மேற்கண்ட தொகை அண்ணா அவர்களிடம் கொடுக்கப்பட்டது. பின்னர், அண்ணா அவர்கள் விரிவுரையாற்றினார்.

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

28—10—55 மாலை 7 மணிக்கு, சென்னை 3-வது வட்ட தி மு கழகச் செயற் குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

29—10—55 இரவு 9 மணிக்கு, சென்னை 35-வது வட்ட (கோடம்பாக்கம்) தி. மு கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அது போது பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி ஆலோசிக்கப்படும்.

ஆலந்தூர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

29—10—55 இரவு 9 மணிக்கு, ஆலந்தூர் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழக அலுவலகத்தில் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

28—16—55 மாலை 6 மணிக்கு, சென்னை - முத்தியாலுப்பேட்டை, முத்தமிழ் மன்ற பணிமனையில், தோழர் டி. கோவிந்தன் தலைமையில் நடைபெறும். 'நமது எண்ணம்' என்னும் பொருள் பற்றி, மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

தென் இந்திய இரயில்வே 'லோன் சொசைடி' தேர்தல்

தோழர்கள் வேண்டுகோள்

அக். 29-ம் தேதியன்று, தென் இந்திய இரயில்வே தொழிலாளர் 'லோன் சொசைட்டி' நிர்வாகிகள் தேர்தல் நடைபெற இருக்கிறது

"நம்மைப் போன்ற பங்குதாரர்கள் ஏறக்குறைய 10,000 பேர் இந்த சொசைட்டி'யில் இருக்கின்றனர்; பங்குதாரர்களின் முடிவுகளை பங்குதாரர்களே முடிவு செய்ய வேண்டுமே தவிர, பங்குதாரர்கள் அல்லாத சிலருடைய தலைமையில் நமக்கு வேண்டிய முடிவுகளைச் செய்து, அவைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதும், அதற்கு ஆவனச் செய்வதும் பண்புக்கும் நாகரீகத்திற்கும் ஏற்றதல்ல

"'லோன் சொசைட்டிக்'கும் பங்குதாரர்களுக்குந்தான் உண்மையான தொடர்பு இருக்க வேண்டுமே தவிர, இவற்றக்குப் புறம்பான நிறுவனங்களுக்கிடையே புகுந்து, பங்குதாரர்களுக்கிடையே பிளவையும், வெறுப்பையும் உண்டாக்கச் செய்யும் எந்தவிதமான முயற்சிக்கும் நாம் இடங்கொடுக்கக் கூடாது.

"'சொசைட்டி'யைப் பொறுத்த வரையில், நாம், 'பங்குதாரர்கள்' என்ற பட்டியலில்தான் வரவேண்டும். மத வேற்றுமையோ, சாதி வேற்றுமையோ, அல்லது, தொழிற் சங்கச் சண்டையோ அதில் இருக்கக்கூடாது. இவ்விதமான வேற்றுமைகளை உண்டாக்கி நம்மைப் பிளவுபடுத்துவதால், ஒரு சிலருக்குப் பிழைக்க வாய்ப்பு ஏற்படுகிறது என்பதற்காகவே, ஒரு சிலர் இவைகளைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்ப்பதிலும், அதில் ஆதாயம் பெறுவதிலும் அக்கரை செலுத்துகின்றனர்

"தொழிலாளியாக இருந்தாலும் குமாஸ்தாவாக இருந்தாலும், இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், நமக்கு என்று வரையறுக்கப்பட்ட உரிமைகளும், சலுகைகளுந்தான் 'சொசைட்டி'யில் நமக்குக் கிடைக்கவேண்டும்.

"இன்று பங்குதாரர்களைப் பிரித்துப் பாழ்செய்யும் நண்பர்கள் நிறுத்தியிருக்கும் டைரக்டர்கள் நமக்குப் புதியவர்களல்ல; ஏற்கனவே இருந்தவர்கள். திருச்சி, பொன்மலையில் பணியாற்றும் ஏறக்குறைய இரண்டாயிரம் இரயில்வே ஊழியர்கள், 'நடைபெறவிருக்கும் தேர்தல் தேதியை ஒத்திப்போட வேண்டும்' என்று வேண்டிக்கொண்டும், அலட்சிய மனப்பான்மையோடு நடந்துகொண்டவர்கள்.

"எனவே, பங்குதாரர்களுக்குச் செய்யவேண்டிய எல்லா உதவிகளையும், வசதிகளையும் செய்து தருவதற்கு உறுதிமொழி கொடுத்திருக்கும் தோழர்களான (1) கே. கே. எம். பணிக்கர், (2) எம். நல்லப்பன், (3) பி. ஜெயராஜ், (4) எஸ். எம். முகம்மது ஹனிப், (5) டி. குழந்தைசாமி, (6) ஏ தங்கவேலு பிள்ளை, (7) என். ராஜேந்திரன் ஆகியோர்களை 'டைரக்டர்'களாகத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

'ஒவ்வொருவருக்கும் 7 வாக்குகள் உண்டு; அவற்றை மேற்குறிப்பிட்டவர்களுக்கே தருமாறு வேண்டுகிறோம்.

"'ஷேர் சர்டிபிகேட்டு'க்களைக் கொண்டுவாருங்கள்; இல்லாவிட்டால், இன்றே சொசைட்டியில்' கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்."

—என்று தோழர்கள் கே. ஏ. குப்பையப்பன், வி ராமானுஜாச்சாரி, டி. சச்சிதானந்தம, திருஞானசம்பந்தம், எம். கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரன், டி. கே சீனுவாசன், ஜி. ராமச்சந்திரன், எம் முஸ்தாபா ஹுசைன், சி. ஜோசப், ஆர் நாராயணசாமி ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர்.

தென் பகுதி இரயில்வேமென்ஸ் யூனியன்

மத்திய சங்கத் தலைவர் எஸ். இராகவானந்தம் அறிக்கை

விழுப்புரம், அக் 22 -

"மத்திய சங்க நிர்வாகிகள், 'விடுதலை' இதழில் வெளியிட்ட அறிக்கையில் 'தோழர் எஸ் இராகவானந்தத்தின் மீது நம்பிக்கையில்லை என்று மத்திய சங்க நிர்வாகிகள் கூறிவிட்டார்கள்; செங்கற்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை கிளைகளின் நிர்வாகிகளுடைய செயல்கள் எஸ் ஆர். எம். யூ-வைக் கட்டுப்படுத்தாது' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி, தொழிற் சங்க சட்ட திட்ட விளக்கத்தைக் கீழே தர விரும்புகின்றேன்:—

விதி (9-பி): — ஒரு சாதாரண உறுப்பினரையோ, அல்லது நிர்வாகியையோ சங்கத்தை விட்டு விலக்க வேண்டுமானால், மத்திய நிர்வாகக் குழுவைக் கூட்டி, அதன் நிகழ்ச்சி நிரலில் இதைப் பற்றிக் குறிப்பிட்டு முடிவெடுக்க வேண்டும். வந்திருக்கும் உறுப்பினர்களில் 75 சதவிகிதத்தினர் விலக்க வேண்டுமென்று முடிவு செய்தால்தான் விலக்க முடியும்.'

விதி 22:—சங்கத்தின் கொள்கைக்கு மாறாக நடக்கும்கிளைகளை கலைத்துவிட மத்தியசங்கத்திற்கு அதிகாரமுண்டு. அப்படி ஒரு கிளையைக்கலைக்கவேண்டுமானல் அதன் மேலுள்ள குற்றச்சாட்டுகளை அக்கிளையின் செயலாளருக்கு அனுப்பி அதனுடைய சமாதானத்தை கோரவேண்டும். கிளைச் செயலாளர் தன் சமாதானக் கடிதம் கிடைத்த 30 நாட்களுக்குள் மத்திய சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். அதன்பின் மத்திய நிர்வாகக் குழுவைக் கூட்டி செயலாளர் அனுப்பிய சமாதானத்தை விவாதித்த பின்னர் 75 சதவிகிதத்தினர் கிளையைக் கலைத்துவிட முடிவு செய்தால் அந்தக் கிளையைக் கலைத்துவிட முடியும்'

"மேற்குறிப்பிட்ட முறையில் என்மீதும், மற்ற கிளைகள்மீதும் நடவடிக்கை எடுத்தால்தான், அது சட்டப்படிச் செல்லும்; அதை விட்டுத் திடீரென்று 'விடுதலை'யில் அறிக்கைவிட்டு, 'இராகவானந்தம் இனி தலைவர் இல்லை; செங்கற்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம் கிளைகளின் செயல்கள் யூனியனைக் கட்டுப்படுத்தாது' என்று தெரிவிப்பது, மேற்படி நிர்வாகிகள் தொழிற் சங்க சட்ட திட்டங்களைப் புரிந்து கொள்ளாததால் ஏற்பட்ட விளைவாகும். எஸ் ஆர். எம் யூ மத்திய சங்கத் தலைவர் தலைமைப் பதவியிலிருந்து விலக்கப்படவுமில்லை—மேற்சொன்ன கிளைகளின் நடவடிக்கைகளை இவர்களின் அறிக்கை கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இதன் பிரதி ஒன்று, 'விடுதலை' இதழுக்கும் அனுப்பப்பட்டுள்ளது"

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.